★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 18உ திங்கள் (30—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 19உ செவ்வாய் (1—5—56) [இதழ் 272

நேருவுடன் கைகுலுக்க மறுத்த காங்கிரஸ் ஊழிய

ஜபல்பூர், ஏப். 27—

கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு கார் ஏற வந்த பண்டித நே வின் காலைத்தொட்டுக் கும்பிட ஒரு காங்கிரஸ் ஊழியர் நெருங் ஞராம்; உடனே போலீசார் அவரைத் தடுத்துவிட்டனராம். இதைக்கண்ட நேரு, அந்த ஊழியரை நோக்கி, 'என் காலைப் பிறர் தொட்டுக் கும்பிடுவதை நான் வெறுக்கிறேன்; வேண்டுமானல், நீ என்னுடன் கைகுலுக்க அனுமதிக்கிறேன்,' என்று கூறி கையை நீட்டினராம்!

அதற்கு அந்தக் காங்கிரஸ் ஊழியர், 'கைகுலுக்குவது, பிரிட்டிஷார் பழக்கம்' என்று கூறி நேருவுடன் கைகுலுக்க மறுத்து விட்டாராம்!

'உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசாதீர்'

'எதிர்ப்புச் சக்தியை ஏளனம் அழித்துவிடாது'

காமராசருக்கு அண்ணு தெளிவுரை

'பெயர் மாற்றம்—ஒரு தத்துவ விளக்கம்'

"சென்னைக்கு, 'தமிழ்நாடு' என்று பெயரை மாற்றுவதற்கு, டெல்லியின் உத்தரவு ஒன்றும் வேண்டியதில்லை; இந்த மாநில சட்டசபையினர், பெரும்பான்மையான வாக்குகளால், 'இனி இந்த மாநிலம் 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படும்' என்று தீர்மானம் நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பினல், அவர் ஆட்சேபணை கூருது, பெயரை மாற்றச் சம்மதிக்கலாம். மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்குத் தேவையான அதிகாரம் காமராசரிடத்தில் இருக்கிறது; சுலபத்தில் முடியக்கூடியதுதானே! நாங்கள் கேட்கிறோம் என்பதற்காகக்கூட மாற்ற வேண்டாம்; இவரால் மதிக்கப்படுகிற பெரியார் கேட்கிருரே! அவருக்காகவாவது மாற்றக் கூடாதா? ஏன் மாற்றவில்லை?

"ஒளிவு மறைவு இன்றி காமராசர் கூறட்டும்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல், காமராசர் அறிக்கை தரட்டும்; ஏன் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவில்லை என்பதற்கான காரணங்களைக் கூறட்டும்.

"'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தால் உலகிற்குப் புரியாது - தெரியாது' என்கிருர் காமராசர்! நாம் அவரை இப்போது மூன்று கேள்விகள் கேட்க விரும்புகிறோம்:

"ஒன்று—உலகத்திற்கு ஏன் புரிய வேண்டும்? இரண்டு—'மெட்ரஸ்' என்று எப்போது பெயர் வந்தது? மூன்றுவது—உண்மையில், 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தால் உலகத்திற்குப் புரியாதா?

"இந்தக் கேள்விகளுக்குக் காமராசர் ஒழுங்காகப் பதில் கூற வேண்டும்; பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிருர். காகிதங்களைப் புரட்டிவிட்டு, அவற்றில் கையெழுத்துப் போடுவதற்காக மட்டுமல்ல, அவர் முதன் மந்திரியாக இருந்துகொண்டு ரூ. 1,500 சம்பளம் வாங்குவது! நாட்டு மக்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களைப் போக்கவும், அவர்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் சேர்த்துத்தான், அவர் முதன் மந்திரியாகவிருப்பது; அதனுல்தான், ஒழுங்காகப் பதில் கூறவேண்டும் என்கிறேன்.

"'இவர்கள் ஏன் இப்படிக் கேட்கிருர்கள் தெரியுமா? எல்லாம் தேர்தலுக்காகத்தான்,' என்று, பொதுத் தேர்தலை மனதில் எண்ணிக் குழப்பம் அடைந்து கண்டபடி பேசாமல், 'தமிழ் நாடு' என்று ஏன் பெயர் வைக்கவில்லை என்பதற்குப் பதில்கூற வேண்டும்,"

என்று, அண்ணு அவர்கள், 29—4—56 அன்று, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"முதலமைச்சர் காமராசர், தி. மு. கழகத்தை ஏகமாகத் தாக்கிப் பேசுகிருர் என்று எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். காமராசர் இப்படித் தாக்கிப் பேசவேண்டுமென்று அவர் பதவிக்கு வந்த காலத்திலேயே நான் விரும்பினேன்.

"காமராசர் ஒரு தமிழர் என்பதால், அவருடைய ஆட்சிக் காலத்தில் நாட்டில் உள்ள காங்கிரசல்லாத—ஆனல் தமிழர் மீது பற்றுக் கொண்ட இயக்கங்கள் பட்டுப் போகுமென்று சிலர் கூறினர்கள்; அது கேட்டு நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

"ஆனல் இப்போதுதான், தமிழர்களிலேயே சிலருக்கு காமராசர் மீது இருந்த மயக்கம் தெளிந்து வருகிறது. நான், சென்னை—மண்ணடியில் நடைபெற்றக் கூட்டத்தில் பேசும்போது, காமராசர் காலத்தில் அரசியல் மந்தமாக இருப்பதாகக் கூறினேன்; இப்போதுதான், அரசியலில் சூடுபிடிக்கிறது; இந்தச் சூடு மேலும் ஏற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

"காங்கிரசார் நம்முடைய தயவை - கழகத்தினுடைய தயவை இதுவரை ஆறுமுறை நாடி இருக்கிருர்கள்; ஆனல், நாம் ஒருமுறைக் கூட காமராசரையோ அல்லது காங்கிரசையோ எந்த ஒரு சின்ன காரியத்திற்காகவும் நாடியதில்லை. இனிமேலும் நாடமாட்டோம்.

"நம்மை காங்கிரசார் ஆறுமுறை நாடினர்கள் என்ருல், 'கழகத்திலே இருப்பவர்கள் உலகத்திலேயே தலைசிறந்த விவேகிகள்; அதனுல்தான் கழகத்தின் தயவை நாடினர்கள்' என்று நான் கூறுவதாக யாரும் கொள்ளவேண்டாம்;

(4-ம் பக்கம் பார்க்க)

சுவை தரும் செய்தி

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திருச்சி மாநில மாநாட்டுக்காகவே ஓர் புதிய நாடகம் தயாரித்து வருகிருர்.

சமுதாயத்துறைப் பிரச்சினைகளைக் கொண்ட அரியதோர் நாடகம், மாநில மாநாட்டுக்கு வருகிறவர்களுக்குக் கலைவிருந்தாகக் கிடைக்க இருக்கிறது.

மும்முரமாக, பயிற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

கலைவிருந்தாக அமைய இருக்கும், இப்புதிய நாடகத்தின் பெயர்,

'சுமை தாங்கி'

ரூ.100 கோடி இலஞ்சமா?

தட்சிணப் பிரதேசத்தை ஏற்க ஆசை வார்த்தை

டில்லி சாகசம்; அமைச்சர் சபலம்!

தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், சென்னை மாநிலத்திற்கு ரு 100 கோடி இலஞ்சம் தருவதாக டெல்லி ஆசை வார்த்தை காட்டிற்ரும்! சபலம் கொண்ட மந்திரி ஒருவர், இதைத் தெரிவித்திருக்கிருர்.

"தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்,சென்னைக்கு மேலும் ரூ. 100 கோடி தருவதாக, டெல்லி சர்க்கார் கூறியிருந்தனர்.

"மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துவதற்காக நமக்குக் கிடைத்த ஒரு பொன்னன வாய்ப்பை நாம் இழந்துவிட்டது, மிக மிக துரதிருஷ்டவசமானதாகும்,"

என்று, தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்காக ஆதரவு திரட்ட மூற்பட்டுள்ள மந்திரி இராமநாதபுரம் ராசா அவர்கள், மதுரைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

'நம் நாடு' - நமது போர்வாள்!

கழகத் தோழர்களின் கடமை பற்றி அண்ணு

"இந்த வட்டாரக் கிளைக் கழகத் தோழர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 100 அன்பளிப்பு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒருவகையில் பார்த்தால், 'நம் நாடு' இதழுக்கு, இதுபோல அன்பளிப்புகள் வழங்குவது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனல், 'நம் நாடு' இதழ், இதுபோன்று அன்பளிப்புகளைப் பெற்றுத்தான் நடைபெற வேண்டியிருப்பது நமக்கெல்லாம் வருத்தம் தரக்கூடியதாகும். 'நம் நாடு' இதழை கழகத் தோழர்கள் அனைவரும் தவருமல் வாங்கிப் படிப்பது என்றநிலை இருந்திருக்குமானல் வட்டாரக் கிளைகள் இதுபோன்று அன்பளிப்புகள் தந்து கொண்டிருக்க வேண்டியதில்லை.

"முதன் மந்திரி காமராசர் கழகத்தின்மீது நடத்துகிற தாக்குதலுக்கு பதில் கூறும் வழி என்ன? நாங்கள், இதுபோன்ற மேடைகளில் பதில்தந்து விடுகிறோம். நீங்கள் பதில் தருவது எப்படி? கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கையில் 'நம் நாடு' இதழ் வைத்திருப்பதுதான் காமராசருக்கு நாம் தரும் சிறந்த பதிலாக இருக்கமுடியும். அப்போதுதான், 'இவ்வளவு வளர்ச்சியும், செல்வாக்கும் பெற்ற இதழை நடத்துகிற கழகத்தையா காமராசர் அலட்சியமாகப் பேசுகிருர்' என்று நாட்டவர் கேட்பர்.

"பலன் தருகிறதோ இல்லையோ—சைவர்கள் விபூதிபட்டை அணிந்து கொள்கிருர்கள்; வைணவர்கள் பட்டை நாமம் தீட்டிக் கொள்கிருர்கள்; கிருத்துவர்கள் ஜெபமாலை வைத்துக் கொள்கிருர்கள்; மதப்பற்றுடையவர்கள் கட்டுப்பாடாக இந்தக் காரியங்களைச் செய்வதைப் போல, கழகத் தோழர்களும்—கட்டுப்பாடாக ஒவ்வொருவரும் 'நம் நாடு' இதழ் வைத்துக் கொள்ள வேண்டும். மதப் பற்றுடையவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது வேறெதுவும் இல்லாவிடினும், இந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியைக் கற்றுக் கொள்ள வேண்டும். எனவே, கழகத் தோழர்கள் இதுபோன்று, இதழ் வளர்ச்சிக்காக நன்கொடைகள் தருவதோடு, 'நம் நாடு' இதழைத் தவருது வாங்கி இதழை வளர்ச்சியுறச் செய்வதற்கு வழிசெய்ய வேண்டும்; 'நம் நாடு' நமது போர்வாள்! போர்வாள் வைத்திருக்க வேண்டியது வீரர்களுடைய கடமை என்பதை உணர்த்த விரும்புகிறேன்."

—29-4-56 அன்று நடைபெற்ற சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணு.

மாநில மாநாடு

அலங்கார முகப்பு

திருச்சி மாநில மாநாட்டுக்கான அலங்கார முகப்பு வேலை, சென்னையில் தி. மு. க. திடலில் அமைக்கப் பட்டுள்ள கோட்டகையில் நடந்து கொண்டு வருகிறது.

புரட்சி நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய மேற்பார்வையில், சென்னை மாவட்ட தி. மு. க. முன்னுள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான், முகப்பு அமைப்புக் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிருர்.

முப்பது அடி உயரமும், அறுபது அடி நீளத்துக்குமாக, மூன்று நுழைவு வாயில்கள் கொண்டதாகவும், மேல்தளம், அதில் கொடிமர அமைப்பு கொண்டதாகவும், முகப்பு அமைக்கப் படுகிறது.

பல வண்ணம் கொண்டதாகவும், சித்திர வேலைப்பாடுகள் உடையதாகவும், முகப்பு தயாராகிறது.

பிரம்மாண்டமான மாநாட்டுக் கோட்டகைக்கு, எழிலளிக்கத் தக்கவிதமாக அலங்கார முகப்பு இருக்கும்.

—விளம்பரக் குழு

ஸ்டாலின் படங்கள் இடம் பெறவில்லை!

மாஸ்கோவில் மே தின விழாக் கொண்டாட்டத்திற்கெனச் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டில் ஸ்டாலினுடைய படங்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—4—'56 திங்கள்

இராட்டை பொருளாதாரம்!

ஒரு தொழிலாளியின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்குவது என்பது பொருள் உற்பத்தியைக் கூட்டுவது என்பதுடன் நின்றுவிடக் கூடியதன்று. அந்த உற்பத்திக் கூடுதலிலேயே, உற்பத்திச் செய்யும் தொழிலாளியின் ஊதிய உயர்வும் அடங்கி இருக்கிறது.

அதுவுமன்றி, இயந்திரத்தின் உதவியால் உழைப்பாளியின் ஆற்றல் அதிகரிப்பதால், அவனுடைய உழைப்பின் கால அளவு குறைப்பதற்கும் இடமேற்படுகிறது. அதாவது, இயந்திரத்தின் துணையினால், உற்பத்திக் கூடுவதும், உழைப்பாளியின் ஊதியம் உயர்வதும், உழைப்பின் நேரம் குறைவதும், உழைப்பாளி மிகுதியான ஓய்வு பெற்று மகிழ்வதும் சாத்தியமாகிறது.

மேற்குறிப்பிட்ட நலன்களை அடையும் கருத்துடன்தான், இயந்திரமுறை அபிவிருத்திக்கு ஆதரவு காட்டப்படுகிறது. இதே அடிப்படையில்தான், கைநெசவாளர்களின் ஊதியத்தை உயர்த்த விசைத்தறிகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தவும் படுகிறது.

சாதாரண இராட்டையில் நூல் நூற்பவர்களுக்கு தினசரி எட்டணா கூலிக்கு மேல் கிடைப்பது கிடையாது. இந்தக் குறைந்த கூலியும், அந்தத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து கொடுக்க முடிவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் கொடுத்து வரும் உதவித் தொகையிலிருந்துதான், அவ்வாறு கூலி அளிப்பதை ஈடுசெய்ய வேண்டியதாக இருக்கிறது.

இக் கைநூற்பு நூலை நம்பி நிலவிவரும் கதர்நெசவுத் தொழிலின் போக்கும், அதே நிலையில் கிடப்பதுதான். அதுவும் அரசாங்க உதவித் தொகையை விழுங்கி வாழ்ந்து வருவதுதான்.

ஒரு தொழிலுக்கு அரசாங்க உதவி அளிப்பது என்பதின் தத்துவமே, தாய்ப்பால் இல்லாத குழந்தைக்கு வேறு பால் கொடுத்து உயிரூட்டுவது போன்ற ஒன்றுகும். குழந்தை பிள்ளைப்பருவமடைந்து, இளைஞனாக வளர்ந்து, தந்தைப் பருவத்தை அடைந்த பிறகுங்கூட பிறர் உதவியால்தான் அவன் உயிருடன் வாழவேண்டுமென்றால், அந்நிலையினும் உதவி செய்வதென்பது நியாயமாகாது. எப்பொழுதும் பிறர் கையையே எதிர்பார்க்கும் ஒருவனால், அவன் பிறந்த குடிக்கோ நாட்டுக்கோ பலன் ஏதும் ஏற்பட முடியாது.

அதைப் போன்றுதான் கைநூற்பும் கைநெசவும் இதுவரை வாழ்ந்து வருகிறது. இனியும் அத்தொழில் அப்படியேதான் வாழ்ந்துவரும் என்பதை, அதன் சென்றகால நடைமுறை உறுதி செய்கிறது.

கைநூற்பில் ஈடுபடுகிறவர்களுக்கு ஊதிய உயர்விற்கு வழி கிடையாது. கதர் நெசவை மேற்கொள்ளுகிறவர்களுக்கும் வருவாய் கூடுவதற்கு மார்க்கம் கிடையாது.

தன் பலத்தால் வளர்ந்தோங்க முடியாத ஒன்றை ஏழைகளுக்கு வாழ்வு தரும் காமதேனு எனக் கூறிக்கொண்டு, இலட்சக்கணக்கில் பணத்தை விரயம் செய்து கைநூற்பையும், கதர் நெசவையும் கட்டி அழுவதைக் காட்டிலும், அவைகளைத் தொலைத்துத் தலை முழுகி விடுவது எவ்வளவோ நல்லது. அவைகளில் ஈடுபட்டு அரை வயிற்றுக்கும் போதாமல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, வேறு உயர்ந்த ஊதியம் தரும் தொழிலைக் காட்ட, காங்கிரஸ் ஆட்சிக்கு வகை இல்லை என்றால், அத்தொழில்களுக்குக் கொடுத்துவரும் உதவித் தொகையைக்கொண்டு, அவர்கள் அனைவருக்கும் வயிறு நிறைய சோறு போடும் ஏற்பாட்டையாவது செய்யலாம்.

இப்படி தண்டச் சோறு போடுவது நியாயமல்லவே எனக் கூறப்படுமானால், உருப்படாதத் தொழிலுக்கு நிரந்தரமாக வரிப்பணத்தைப் பாழாக்கி வருவதும் நியாயமல்ல என்பதை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இயந்திர நாகரிகத்தில் கைநூற்பும், கதர் நெசவும் வடிகட்டின அநாகரிகமாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மனித நாகரிக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், சில பல நாட்டில் கை நூற்புக்கும், கதர் நெசவுக்கும் தேவை இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு நாடும், தனது தொழில் வளர்ச்சியை இயந்திரத்தோடு பிணைத்துக்கொண்ட பிறகும், வேலையற்றோருக்கு வேலையளிப்பதற்காக எனக் காரணம் காட்டி, கை இராட்டையைக் கட்டி அழுததாக வரலாறு இல்லை.

ஜனத்தொகையில் குறைந்த இங்கிலாந்தும், அதிலும் கூடுதலான ஜனத்தொகையைக் கொண்ட பிரான்சும், இயந்திர காலத்திற்குக் கால் வைத்த பின்னர் கை இராட்டையை உயிரூட்டி வளர்த்ததாக எவரும் கேள்விப்பட்டதில்லை. அமெரிக்காவும் கைராட்டையைத் தேடிக் கண்டுபிடித்து தோளில் சுமந்துத்திரிய முனைந்ததில்லை.

பொதுவுடைமை இரஷ்யாவிலும் கைராட்டைக்குப் புதுவாழ்வு தேடித்தரவில்லை. ஜப்பான் தொழில் வளர்ச்சியிலும் கைராட்டை இடம் பெறக் காணோம்.

அங்கெல்லாம் மக்கள் தொகை குறைவு—இந்தியத் துணைக் கண்டத்திலோ மக்கள் எண்ணிக்கை அதிகம்; எனவேதான், இங்கு அனைவருக்கும் வேலை அளிப்பதற்காக கை இராட்டையின் உதவி கட்டாயத் தேவையாகிறது என்ற வாதத்தை சிலர் கிளப்பக் கூடும். அந்த வாதம் ஒன்றுதான் கைஇராட்டைக்கு பக்கபலமாகவும் இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்து ஜனத்தொகையைக் காட்டிலும் ஏறத்தாழ பத்து கோடி மக்களைக் கூடுதலாகக் கொண்ட நாடாக நவசீனம் இருக்கிறது. அங்குள்ள கோடானுகோடி மக்களுக்குத் தொழில் தருவதற்காக, கை இராட்டையை ஏற்றுக்கொண்டிருப்பதாகத்தெரியவில்லை. கதர் நெசவுக்கும், அங்கு புத்துயிர் ஊட்டப்படுவதாகத் தெரியவில்லை.

நமது வரிப்பணம் ஒவ்வொரு ஆண்டும் பாழாவதும, தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அரைபட்டினி கிடப்பதும் தான், இராட்டையின் பொருளாதாரம். அதைக்கட்டி அழுவதுதான் காங்கிரஸ் ஆட்சியின் பழுதுபட்ட பொருளாதாரக் கண்ணோட்டமாக இருக்கிறது.

கயானவில் ஜனநாயக ஆட்சி திரும்பும்!

பிரிட்டன் இறங்கிவருகிறது

லண்டன், ஏப். 28—

பிரிட்டிஷ் கயானாவில், மீண்டும் ஜனநாயக சர்க்கார் அமைப்பது குறித்து பிரிட்டிஷ் சர்க்கார் யோசித்து வருகிறார்களாம்.

'சட்டசபையிலும், நிர்வாகத்திலும் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளை இடம் பெறச் செய்வதென்பதே அந்த ஏற்பாடு,' என்று, காலனி இலாகா செயலாளரான லெனுக்ஸ் பாயிட் தெரிவித்திருக்கிறாராம்.

கம்யூனிஸ்டு ஆட்சியை அமைக்க முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டி, ஜெட்டி ஜெகனை நாடு கடத்தி, அவர் முதன் மந்திரியாகவிருந்து நடத்தி வந்த மக்கள் முற்போக்குக் கட்சி ஆட்சியைக் கலைத்து, அரசியல் சட்டத்தை ஒழித்துக் கட்டி, அட்டகாசம் செய்தனர்; பிரிட்டிஷார், 1953-ம் ஆண்டில்!

சட்டசபையில் 12 தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களும், நான்கு அதிகாரிகளும், எட்டு நியமன உறுப்பினர்களும் இருப்பார்கள் என்றும், நிர்வாகக் கவுன்சிலில் கவர்னரின் கீழ் நான்கு அதிகாரிகளும், ஒரு நியமன உறுப்பினரும், ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் பணியாற்றுவார்கள் என்றும், தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறும் என்றும் பிரிட்டிஷ் காலனிச் செயலாளர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

ஏன் திரும்பிச் சென்றனர் என்பது தெரியாதாம்!

பண்டித நேருவின் பாராளுமன்றக் காரியதரிசி திருமதி லட்சுமி மேனன், 'இஸ்ரேலிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியிருந்த இந்திய யூதர்கள் ஏன் மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர் என்பதற்குரிய காரணம் அரசாங்கத்திற்குத் தெரியாது' என்று இராஜ்யங்கள் சபையில் குறிப்பிட்டார்.

அவர்களில் பலர், இஸ்ரேலில் வாழ்க்கை வசதிகள் திருப்திகரமாயில்லாததால் இந்தியாவிற்குத் திரும்பினர் என்றும் அவர் கூறினார்.

'இஸ்ரேலில் நிற வேற்றுமை பாராட்டப்படுகிறதா?' என்று கேட்டதற்கு, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் உள்ளனவென்றும், அதையொட்டி அரசாங்கம் சில இடங்களில் விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்துள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் ரூ. 8½ இலட்சம் செலவாயிற்றாம்!

"நேபாளம், சவூதி அரேபியா, இரான் மன்னர்கள் மூவரும் இந்தியாவிற்கு வந்ததால் ரூ. 8,46,000 செலவாயிற்று"

என்று, நேரு அவர்கள் மக்கள் சபையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்துள்ளார்.

1955-56-ம் ஆண்டில், ஜனவரி மாதம்வரை, சர்க்கரை 'எக்சைஸ்' வரியின் மூலம் இந்திய சர்க்காருக்கு மொத்தம் ரூ. 14 கோடி வருவாயிற்று.

'பெல்லாரி ஆந்திராவுடன் இணைய வேண்டும்'

'வாக்கெடுப்பு நடத்தி முடிவுகாண்க!'

மக்கள் சபைக்கு 76 ஆந்திர எம். எல். ஏ.-க்கள் மனு

புதுடில்லி, ஏப். 27—

'பெல்லாரி தாலுகாவின் எதிர்காலத்தை முடிவு செய்ய வாக்கெடுப்பு நடத்துக'

என்று கோரி, 76 ஆந்திர சட்டசபை உறுப்பினர்கள் டெல்லி மக்கள் சபைக்கு மனு ஒன்று அனுப்பியிருக்கின்றனர்.

'பெல்லாரி தாலுகாவின் பிரதிநிதியாக சட்டசபையிலிருந்த உறுப்பினரான ஞானப்பா தமது பதவியைவிட்டு விலகி விட்டமையினால், பெல்லாரி: குறித்து இறுதி முடிவு மேற்கொள்ளுமுன், அந்தத் தொகுதியில் உப தேர்தல் நடத்த வேண்டும்: மாநில புது அமைப்புக் குழுவினரின் சிபாரிசுப்படி, பெல்லாரி ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும்'

என்று ஆந்திர எம். எல். ஏ.-க்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மக்கள் சபைக்கு வந்துள்ள வேறொரு மனுவில், ஷோலாப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த எழுபேர்கள், 'ஷோலாப்பூர் நகரம், தென் ஷோலாப்பூர், அகல் கோட் தாலுகாக்கள் எல்லாம் பூகோள, சரித்திர, கலாச்சார, பொருளாதாரக் காரணங்களுக்காக கர்நாடக நிலத்துடன் சேர்க்கப்பட வேண்டும்' என்று கோரியுள்ளனராம்.

விவசாயப் பட்டதாரிகளுக்கு

பண்ணை நடத்த நிலம்

சௌராஷ்டிர சர்க்கார் இலவசமாக வழங்குகிறது

ராஜ்கோட், ஏப். 29—

விவசாயத்துறைக் கல்வி பெற்று பட்டம் பெறுபவர்களுக்கு அவரவர்கள் பிரதேசங்களில், 'பயிரிடக்கூடிய தரிசு நிலங்களைத் தந்து விவசாயத்தில் ஈடுபடச் செய்வதின் மூலம், அந்தப் பிரதேசங்களில் அவர்களை ஒரு எடுத்துக்காட்டான குடியானவர்களாக்குவதற்கு சௌராஷ்டிர மாநில சர்க்கார், திட்டம் ஒன்று தீட்டியிருக்கிறார்கள்' என்று தெரியவருகிறது

இந்தத் திட்டப்படி, 10 பட்டதாரிகளுக்கு 25 முதல் 40 ஏக்கர் வரை இலவசமாக நிலங்கள் வழங்கப்படும் என்றும், ஆனால், அவர்கள் நிலங்களைப் பெற்றுக்கொண்டதும், குறைந்தது மூன்றாண்டுகளுக்கேனும் அந்த நிலத்தில் பயிரிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

முதல் ஆண்டில் ரூ 500-ம், இரண்டாம் ஆண்டில் ரூ. 250-ம் மானியமாக ஒவ்வொருவருக்கும் தரப்படும் என்றும், சரியான முறையில் நிலத்தைச் சாகுபடி செய்து, 5 ஆண்டுகள் தொடர்ந்து பண்ணையை நடத்தி வெற்றி பெறுவார்களேயானால், அந்த நிலம் அவர்களுக்கே உரித்தானதாக்கப்படும் எனறும் சௌராஷ்டிர சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்

நாகர்களின் தலைகளை கொய்வதில்

நேருவின் பெருமிதம்!

வேட்டையாடுவதில்ராணுவம் தீவிரம் காட்டுகிறது

ஷில்லாங், ஏப். 27—

நாகர்களை வேட்டையாடும்திருப்பணியை, டெல்லி பெரிய மனிதர்கள் தீவிரமாக்கியிருப்பதின் விளைவா, விடுதலை முழக்கமிடும் நாகர் தம் தலைகள் தினந்தோறும் கொய்யப்படுகிற சேதி கிடைத்தவண்ணமுள்ளது.

நேற்று முன்தினம், இந்திய இராணுவத்தினர், 5 தீவிர நாகர்களைச் சுட்டுக் கொன்றிருக்கின்றனராம்—பெருமிதத்தோடு, அறிவிக்கப்படுகிறது.

நேரு பண்டிதர், டெல்லி மக்கள் சபையில் சில நாட்களுக்கு முன் நாகர்களின் கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்டுள்ள இராணுவம், தன் முழுபலத்தையும் கொண்டு தாக்குதல் நடத்திவருவதாகவும், தீவிரவாதிகளின் நடமாட்ட வேகம் குறைந்திருப்பதாகவும் அறிவித்தது நினைவிலிருக்கலாம். இந்திய இராணுவத்தினர், நாகர்களின் தலையைக் கொய்து கொண்டிருப்பதைத்தான் அவர் தம் இராணுவம் பெறும் வெற்றி எனப் பெருமிதப்படுகிறார் போலும்!

இதுவன்னியில், இந்திய இராணுவத்தினர், நாக மக்களையே, விடுதலை கோரும் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தூண்டிவிடுவதாகவும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது.

வங்க-பீகார் இணைப்பு?

மேலும் ஒரு சிக்கல்

கல்கத்தா, ஏப். 26—

"மேற்கு வங்கம் — பீகார் இணைப்பு ஏற்படின், இந்தியப் பேரரசால் வங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் எந்த மாநிலத்தைச் சேரும் என்ற பிரச்சினை எழும்பியுள்ளது. இரு மாநிலங்களும் தனித்தனியே நிர்வாகத்தை மேற்கொண்டால், சீரமைப்புக் குழுவால் தீர்மானிக்கப்பட்டு இந்திய அரசினரால் திருத்தம் செய்யப்பட்ட பகுதிகள், மேற்கு வங்கத்துடனேயே சேர்க்கப்படவேண்டும் என மத்திய அரசியலாருக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது; இந்த மாநில மக்களிடையேயும் ஓரளவில் திருப்தியை உண்டு பண்ண இது துணை புரியும்," என்று, மேற்கு வங்க முதலமைச்சர் பி. சி. ராய் அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

கல்லூரி ஆசிரியர் சம்பள உயர்வு

சர்க்கார் பொறுப்பேற்காதாம்

புதுடில்லி, ஏப். 26—

பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக செலவில் முழுப் பொறுப்பையோ அல்லது ஒரு பகுதி சம்பந்தமான பொறுப்பையோ ஏற்கும் நிலையில் இல்லை என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டதாம்.

இது பற்றி துணைக் கல்வி அமைச்சர் டாக்டர் கே. எல் மாலி மக்கள் சபையில் தெரிவிக்கையில், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகக் குறைவானதால் அவர்களின் நிலைமையை உயர்த்தவே சர்க்கார் தீர்மானித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

திரு-தமிழ் வட்டங்கள்

தனி மாவட்டமாக உருவாகும்

நாகர்கோயில், ஏப். 26—

தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் வட்டங்கள் சென்னையுடன் இணைக்கப்படும்போது, அவை தனிமாவட்டமாக உருவாக்கப்படும் என்று சர்க்கார் உறுதிமொழி தந்திருப்பதாக தி. த. நா. காங்கிரஸ் தலைவர் தோழர் நேசமணி எம். பி. தெரிவித்திருக்கிறார்.

இப்போதுள்ள நிர்வாக அமைப்பு சில நாட்களுக்கு நீடிக்கும் என்றும், நாகர் கோவிலைத் தலைநகராகக்கொண்டு பின்னர் ஒரு மாவட்டமாக உருவாகுமென்வும் நேசமணி விளக்கம் கூறியிருக்கிறார்.

புதிய 'அம்பர் இராட்டை' டெல்லிக்குப் போகிறது

ஆதரவுதர கோரி வடநாட்டு எஜமானர்களிடம் நிதி மந்திரி காவடி

சென்னை, ஏப். 27—

கோவையைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவரால் திருத்தம் செய்யப்பட்ட 16 கதிர்களைக் கொண்ட அம்பர் சர்க்காவை, டில்லியிலுள்ள அமைச்சர்கள், அதிகாரிகள், மற்று முன்னோர் பார்வையிடுவதற்காக நிதியமைச்சர் சுப்பிரமணியம் டில்லிக்கு எடுத்துச் செல்கிறார். இப்புதிய அம்பர் சர்க்காவின் விவரத்தை எடுத்துக் கூற பாலசுந்தரமும் டில்லிச் செல்லலாமென தெரிய வருகிறது.

* * *

தொழிலமைச்சர் விளக்கம்

"4 கதிர் இருப்பினும், 16 கதிர் இருப்பினும் குடிசைத் தொழில் முறையில் இயங்குவதாயிருப்பின் அதற்கு ஆதரவு தருவதவசியம்; குடிசைத் தொழில் முறையில் வேலை செய்யக்கூடியதா என்பதையே நாம் கவனிக்கவேண்டும்,"

என்று, தொழிலமைச்சர் எம் பக்தவத்சலம் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது :—

"புதிய அம்பர் சர்க்காவை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் சேர்த்தால் நெசவாளருக்கு நன்மை உண்டாகும். நூல் விலை மாற்றங்கள் நெசவாளரைப் பாதிக்காது. அம்பர் சர்க்காவில் 80-ம் எண் நூல் வரை ஆலை நூலுக்கு இணையாகத் தயாரிக்கலாம் எனத் தெரிகின்றது. விலை குறைவாகவும் நூல் கிடைக்கும்; அம்பர் சர்க்கா நூலினால் நெய்யப்படும் துணியைக் கதராகக் கொள்ளலாம். ஒரு காலத்தில் கதர் ஏற்றுமதிகூட சாத்தியமாகும்.

"அம்பர் சர்க்காவை ஆதரிப்பதினால் சாதாரண சர்க்காவை கைவிடும் நோக்கம் இல்லை. கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் பிர்க்காவில் ஆயிரக்கணக்கான பெண்கள் தம்மை நூல் நூற்பவர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ளனர். இவர்களின் கூலி நாளொன்றுக்கு 8 அணா. பஞ்சப் பகுதிகளில் ஒன்றுமே கிடைக்காத நிலைமையில் இந்த வருமானம் கிடைப்பது எவ்வளவோ நல்லது!"

அறிவிப்பு

திருச்சி மாநில மாநாட்டிற்கு கிளைக் கழகங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் விபரங்கள் 'நம் நாடு' இதழுக்கு அனுப்பப்படுகின்றன. அவைகளை எல்லாம் பிரசுரிப்பதற்கு, இட நெருக்கடியால் இயலவில்லை.

அந்த விபரங்களை, தி. மு. கழகத் தலைமை நிலைய முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

—ஆசிரியர்

நேபா பத்திரிகைக் காகித தொழிற்சாலை துவக்கம்

ரூ. 6·5 கோடி செலவில் அமைந்தது

ஆசியாவிலேயே மிகப் பெரியதாம்!

நேபாநகர், ஏப். 26—

இந்தியாவிலேயே முதல் முதலானதும், ஆசியாவிலேயே மிகப் பெரியதுமான பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலையை இந்தியப் பிரதமர் நேரு இன்று திறந்துவைத்திருக்கிறார்.

இந்தத் தொழிற்சாலை ரூ. 6 50,00,000 செலவில் அமைந்திருப்பதாகும்.

இங்கு தினம் 100 டன் பத்திரிகைக் காகிதம் உற்பத்தியாகும்.

இந்தியாவில் உள்ள 330 பத்திரிகைகள் மொத்தம் 25 இலட்சம் பிரதிகள் தயாரிப்பதற்கு ஆண்டுதோறும் 90,000 டன் காகிதம் தேவைப்படுகிறது; இதில் 40 சதவிகிதத் தேவையை இந்தத் தொழிற்சாலை பூர்த்தி செய்யும்.

நேபா தொழிற்சாலை என்று அழைக்கப்படும் இது; முதலில் 1948-ல் தனிப்பட்டவர்களால் துவக்கப்பட்டது. பின், மாநில சர்க்காரின் ஆதரவு பெற்ற தொழிற்சாலையாக உருவாகிற்று. இப்போது டில்லி சர்க்கார் ரூ 2,50 00,000 கடன் தந்திருக்கிறார்கள் ரூ 2 கோடிக்கு மத்திய பிரதேச மாநில சர்க்கார் பங்கு வாங்கியிருக்கிறார்கள்; இன்னும் தனிப்பட்டவர்களுக்கும் பங்கு இருக்கிறது.

'அம்பர் சர்க்காவிற்காக ஆலை வளர்ச்சியைத் தடுக்கமாட்டோம்'

'ஆனாலும் 'அம்பர் சர்க்கா' வளர்ச்சிக்கு உதவுவோம்'

பண்டித நேருவின் விசித்திர வியாக்கியானம்

புதுடில்லி, ஏப். 26—

"அம்பர் சர்க்காவின் நலன் கருதி, ஆலைகளின் கதிர்களை அதிகரிப்பதை, இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ சர்க்கார் தடை செய்யாது;"

என்று, பிரதமர் நேரு இங்கு மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

"ஆனால் அம்பர் சர்க்கா வேலை செய்யும் முறை எங்களுக்குத் திருப்தி தருகிற அளவிற்கு— அது, பெருகுவதற்கு எல்லா உதவிகளும் செய்வோம்; அம்பர் சர்க்கா பெருக்கத்திற்கு அளவு நிர்ணயிக்க மாட்டோம்,"

என்றும், அவர் 'உறுதி மொழி' அளித்தாராம்!

திரு—கொச்சிக்கு ஒரு துணை ஆலோசகர்

திருவனந்தபுரம், ஏப். 27—

திட்டக் குழுவைச் சேர்ந்த கே. என். சுப்பிரமணியம் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி, திரு—கொச்சிக்கு துணை ஆலோசகராக நியமனம் பெற்றிருக்கிறார் என்றும், இன்னும் ஒரு கிழமையில் அவர் இங்கு வந்து சேருவார் என்றும் தெரிய வருகிறது.

இந்தத் தகவலை இப்போதைய ஆலோசகரான பி. எஸ். ராவ் தெரிவித்திருக்கிறார்.

ஒரு மனிதரால் மாநில நிர்வாகம் முழுவதையும் கவனிப்பது என்பது சாத்தியமானதல்ல என்றும், சுப்ரமணியம் தனக்கு நிர்வாகத்தைக் கவனிப்பதில் துணைபுரிவார் என்றும் ராவ் தெரிவித்திருக்கிறார்.

விசேட போலீஸ் நிறுவன உயர்தர அதிகாரியாயிருந்து ஓய்வு பெற்றுள்ள டி. ஏ. பாம்பாவாலே என்பார், மாநிலத்தில் நிலவுவதாக குற்றம் கூறப்பட்டிருக்கிற இலஞ்ச ஊழல்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு, நடவடிக்கை எடுப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடுவூர் தோழர்கள் மீது வழக்கு

வடுவூர், ஏப் 27—

கடந்த பிப்ரவரி 20-ந்தேதி நடைபெற்ற அர்த்தாலை ஒட்டி, வடுவூர் தி. மு. கழகத் தோழர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

மீண்டும் கடந்த ஏப்ரல் திங்கள் 14-ம் நாளன்று மன்னார் குடி நீதிமன்றத்திற்கு வருமாறு உத்தரவிடப்பட்டனர்.

அன்று வழக்கு விசாரிக்கப்படாமல், 23-4-56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அப்போதும் தோழர்கள் வடுவூரிலிருந்து மன்னார் குடிக்கு வந்தனர். ஆனால், அன்றும் வழக்கு விசாரிக்கப்படாமல் 3—5—56-ந் தேதிக்கு வழக்கை ஒத்திவைப்பதாக மன்னார்குடி தாலுகா நீதிபதி தெரிவித்திருக்கிறார்.

கருணாநிதிக்கு தூத்துக்குடி நகராட்சி மன்ற வரவேற்பு

23—4—56 மாலை 6-மணிக்கு ஆரோக்கியபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள எஸ் எம். எஸ். மாளிகையில், திரு. வி. வி. டி. நினைவு ஆரம்பப்பள்ளி திறப்புவிழா, நகர மன்றத் தலைவர் திரு. சாம். மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்.

திரு. இராமலிங்கம் முன்மொழிய, திரு அய்யாசாமி, வழிமொழிய தலைவர் அமர்ந்து, கல்வியைப்பற்றிப் பேசினார்; பின் தோழர்கள் எம். எஸ். சிவசாமி, எஸ். முத்து, முல்லை சத்தி ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் மு கருணாநிதி பள்ளியைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். தோழர் கே வி. கே. சாமி (பள்ளி நிர்வாகி) நன்றி கூறினார்.

அன்று இரவு 10 மணிக்கு இரட்சண்யபுரம் நாடகக் குழுவினரால் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற நாடகம் நடைபெற்றது.

மு. கருணாநிதிக்கு நகர மன்ற வரவேற்பு

24—4—56 காலை 10-மணிக்கு தூத்துக்குடி நகரமன்றம் தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பு அளிக்க பெரியதோர் ஏற்பாடு செய்திருந்தது; தோழர் கே. வி. கே. சாமியுடன் தோழர் மு. கருணாநிதி நகரமன்றம் வந்து இறங்கியதும், நகரமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும், அவரை நகரமன்ற மாளிகைக்குள் அழைத்துச் சென்றார்கள்; தோழர் கே. வி. கே சாமி நகரசபையின் வரவேற்பு இதழை வாசித்தளித்து மாலை சூட்டினார்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

பர்மாவிலுள்ள இந்தியர்கள் எண்ணிக்கை

பர்மாவில் 6 முதல் 7 இலட்சம் இந்தியர் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது 3,731 இந்தியருக்கு பர்மா வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதாம்.

பாங்கிகளை தேசீயமயமாக்க டில்லி சர்க்கார் மறுப்பு

மந்திரி கூறும் நொண்டிச்சமாதானம்

பாங்கிகளைக் கட்டுப்படுத்த மட்டும் மசோதா வருமாம்

புதுடில்லி, ஏப். 27—

பாங்கி நிறுவனங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஒன்று சீக்கிரமே மக்கள் சபையில் தாக்கலாகுமெனத் தெரிய வருகிறது.

இந்தத் திருத்தத்தின் மூலம் 'ரிசர்வ் பாங்கி'க்கு, இதர வர்த்தக பாங்கிகளைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் கூடுதலாக வழங்கப்படுகிறது என்றும் தெரிய வருகிறது.

இந்தத் தகவலை, மக்கள் சபையில் மந்திரி ஏ. சி. குஹா தெரிவித்திருக்கிறார்.

தோழர் எஸ். குருபாதசாமி, 'இந்தியாவில் உள்ள எல்லா பாங்கிகளையும் தேசிய மயமாக்க வேண்டும்' என்று தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார்.

இந்தத் தீர்மானம், பெருவாரியான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. பின்னர்தான், மேற்கண்ட தகவலை மந்திரி அளித்திருக்கிறார்.

பாங்கிகளை தேசியமயமாக்காததற்கு விளக்கம் கூறுவதாக நினைத்துக்கொண்டு மந்திரி மேலும் கூறியதாவது :—

"இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் நீண்டகால சேமிப்புகள் உள்ளன; ஆனால் பாங்கிகளில் போடப்படும் பணம், குறுகிய கால சேமிப்புகள்தான்.

"தனிப்பட்டவர்கள் நடத்துகிற பாங்கிகள் ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும்; இன்றேல், 'ரிசர்வ் பாங்கி' அந்த நிறுவனங்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

"இந்தியாவில் உள்ள பாங்கி அலுவல்களில் 22 அல்லது 23 சதவிகிதம் வரை மேற்கொண்டிருந்த இம்பீரியல் பாங்கி தேசியமயமாக்கப்பட்டு, புதிய 'அரசாங்க பாங்கி' திறவப்பட்டிருப்பதினால், மேலும் இதர பாங்கிகளைத் தேசியமயமாக்க வேண்டிய வேலையை மேற்கொள்ளத் தேவை இல்லை."

---

*:*********************************

மாநில மாநாடு

தீர்மானம் அனுப்புவோர் குறித்து விளக்கம்

★

திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டிற்கு, தீர்மானங்களை அனுப்ப, பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமே உரிமையுடையவர்களாவர். ஒரு பொதுக்குழு உறுப்பினர் முன்மொழிந்தும், மற்றொரு பொதுக்குழு உறுப்பினர் வழிமொழிந்தும் அனுப்புதல் வேண்டும்.

பொதுக்குழு உறுப்பினரல்லாதவர்கள் தீர்மானம் அனுப்ப விரும்பினால், சம்மந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள பொதுக்குழு உறுப்பினர்களில் ஒருவர் முன்மொழிந்தும், மற்றொரு உறுப்பினர் வழிமொழிந்தும் அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்டவாறு அனுப்பப்படும் தீர்மானங்கள் மட்டுமே, பொதுக்குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தீர்மானங்களை, 10—5—56-க்குள், 'வரவேற்புத் தலைவர், தி. மு. கழக மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு, தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

—விளம்பரக் குழு

************-****-*********-**********-**

பிரிட்டிஷ் பிரதமர் ரஷ்யா செல்வார்

பிரிட்டிஷ் பிரதமரான அந்தோணி ஈடன், ரஷ்யாவிற்கு வருகைதர தான் விடுத்திருந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் தெரிவித்திருக்கிறார்.

இதர வேலைகள் இருப்பதால் இன்னும் தேதி நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

மாநில மாநாடு நிதி

பொதுச்செயலாளர் அவர்களிடம் தி. மு. பூண்டி பொதுக் கூட்டத்தின் போது மஜீது மன்றம் ரூ. 5

செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் மூலம் :—

கவுல்பஜார் தி. மு. கழகம் ரூ. 10

மதுராமங்கலம் தி மு. கழகம் ரூ. 10

இரு சபைகள் தேவையா?

மாநில சர்க்கார்களே முடிவு செய்யவேண்டுமாம்

புதுடில்லி, ஏப். 27—

மாநில சீரமைப்புக் குறித்த அரசியல் சட்டதிருத்த மசோதாவை, மக்கள்சபை, கூட்டுத் தனிக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது.

மாநிலங்களில் இரண்டு சபைகள் தேவையா அல்லது வேண்டாமா என்பது பற்றி மாநிலங்களே முடிவு செய்துகொள்ளலாமென்று உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் கூறியுள்ளார்.

நீர்வளிக்குண்டின் ஆற்றல்

ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தபடுமாம்

லண்டன் ஏப். 26—

சோவியத் அணுசக்திக் குழு அதிபர் டாக்டர் ஐவன்குர் சடோவ் நீர்வளிக் குண்டின் ஆற்றலை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்துவதற்கான தருணத்தில் ரஷ்யா உள்ளதாகக் கூறியதைக் கேட்ட பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பெருவியப்படைந்தனராம்!

காமராசருக்கு அண்ணா தரும் பதில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மை அவர்கள் நாடினார்கள் என்பதை நான் பெருமையாகக் கொள்கிறேன் என்றும் நினைக்கவேண்டாம்; 'நமக்கென ஒரு கொள்கை இருக்கிறது—இலட்சியமிருக்கிறது; அதனாலேதான் அவர்கள் நம்மை நாடினார்கள்.'

"ஏமாற்றமுற்ற காதலன், தான் காதலித்த பெண்ணைப் பற்றி பிறரிடம் என்ன கூறுகிறான்?'—'அவளென்ன அவ்வளவு பெரிய அழகியா? கண்கள் பார்க்கச் சகிக்கவில்லையே! நடை விகாரமாயிருக்கிறதே!' — என்றுதானே? அதுபோல, நமது தயவைப் பெற முடியாமற்போன காமராசர், ஏமாற்றமுற்ற காதலன்போல் கழகத்தைப் பற்றி ஏசிப் பேசுகிறார்.

"நமக்குக் காதலிக்கத் தெரியாது என்பதாலே அல்ல, நாம் காங்கிரசை விரும்பாதது; நமக்கென்று ஒரு காதலி இருக்கிறாள்; அவள் புவியிலேயே அழகி—புவனசுந்தரி என்று இல்லாமலும் இருக்கலாம்; ஆனால் நமக்கென்று வாய்த்த காதலி அவள்.

"காங்கிரசார் ஆறுமுறை கழகத்தின் தயவை நாடினார்கள் என்பதை மட்டும் இப்போது கூறுகிறேன்; காமராசர் கழகத்தைக் கண்டபடி பேசும் தம்முடைய போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், எங்கெங்கே—எவரெவர் மூலம் கழகத்திடம் தூது அனுப்பப்பட்டது என்பதை நான் அம்பலமாக்க வேண்டியவனாயிருப்பேன்.

"காமராசர்மீது நமக்கு கோபமெல்லாம் அவரது பொது வாழ்க்கைப் போக்குக் குறித்துதான். இதை அவர் புரிந்து கொள்வாரேயானால், அவர் ஈடுபட்டிருக்கிற பொது வாழ்க்கைக்கும், அதை நம்பியிருக்கிற நாட்டு மக்களுக்கும் நல்லது.

"காமராசர், நாம் சின்னஞ்சிறு காரியங்களுக்கெல்லாம் கிளர்ச்சி நடத்துவதாகக் கூறினாராம் — 'டால்மியா என்ற ஒருவன் வடநாட்டிலிருந்து திருச்சியில் உள்ள கல்லக்குடிக்கு வந்து, அங்கு ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்து பலருக்கு வேலை தந்திருக்கிறான்—பல இலட்ச ரூபாய் மூலதனம் போட்டு; அந்த ஊர்ப் பெயர் 'டால்மியாபுரம்' என்று ஆக்கப்பட்டிருப்பதை மாற்றவேண்டுமென்பதற்காக, தி. மு. கழகத்தவர் கிளர்ச்சி செய்கிறார்கள்; பெயரை மாற்றுவதற்காக ஒரு கிளர்ச்சியா?'—என்று பேசினாராம் காமராசர்!

"கல்லக்குடி என்றிருந்த பெயரை 'டால்மியாபுரம்' என்று பெயர் மாற்றியிருப்பதை திருத்தி அமைக்கவேண்டும்; அந்த அவமானச் சின்னம் துடைக்கப்பட வேண்டும்—என்று நாம் கோருகிறோம்; அதற்காக கிளர்ச்சி நடத்தினோம்.

"இந்தக் கிளர்ச்சியை காமராசர், 'சின்ன கிளர்ச்சி' என்று கூறுகிறார்.

"இருக்கட்டும்; 'இந்தச் சின்ன கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டாம்;' என்று, என்னிடம் ஒரு உயர்தரக் காங்கிரஸ் தலைவர் கேட்டுக்கொண்டார்.

"'டால்மியாபுரம் என்பது காங்கிரசாரிலேகூட சிலருக்குப் பிடிக்கவில்லை; ஆனாலும் என் செய்வது? காமராசர் இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்; அவர் நம்மவர்; நல்லவர்; மாம்பலம் புயலையும், திருவல்லிக்கேணி தீயையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது; கொஞ்சம் சாவகாசம் தாருங்கள்; பொறுத்திருங்கள்; கல்லக்குடி பற்றி காமராசர் கவனிப்பார்'—என்று என்னிடம் அந்தக் காங்கிரஸ் தலைவர் கூறினார். அவரே, 'உங்களுக்கு வேண்டுமானால் டால்மியாபுரம் அருகே புதிதாகக் 'கல்லக்குடி' என்று ஒரு இரயில் நிலையம் அமைத்துத் தருகிறோம்'—என்றும் தெரிவித்தார்.

"'நாங்கள் கோருவது புதிய இரயில்வே ஸ்டேஷன் அல்ல; புதிய இரயில்வே ஸ்டேஷன் வேண்டுமானால் கிளர்ச்சியா செய்யவேண்டும்? தடியடியையா தாங்கிக்கொள்ளவேண்டும்? துப்பாக்கிக் குண்டுகளையா மார்பில் ஏந்தவேண்டும்? தேவை இல்லையே! புதிதாகத் திறக்கப்பட்டுள்ள நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் எப்படி வந்தது? கிளர்ச்சி நடத்தியா? இல்லையே! ஓய்வு பெற்றுள்ள அதிகாரிகள், ஓயாது சர்க்காருக்கு எழுதிக்கொண்டே இருந்தார்கள்—'இங்கே நிரம்பப் பேர் வரப்போக இருக்கிறார்கள்; இங்கு ஒரு இரயில் நிலையம் அமைப்பது அவசியம்'—என்று; எனவே நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் வந்தது; எனவே, நாங்கள் கிளர்ச்சி நடத்துவது புதியதொரு இரயில்வே ஸ்டேஷன் வேண்டுமென்பதற்காக அல்ல'—என்று நான், அந்தக் காங்கிரஸ் தலைவருக்கு விளக்கம் கூறினேன்.

"அவர், 'காமராசர் இது குறித்து கவனிப்பார்; சற்று பொறுத்திருங்கள்,' என்று என்னிடம் பேரம் பேசினார்; நானும் நம்பினேன்; ஆனால், இப்போது என் நம்பிக்கையை முறித்துவிட்டார்கள். காமராசர் இப்போது 'இது என்ன சிறு கிளர்ச்சி' என்று பேசுகிறார். ஆனால் என் நம்பிக்கையை முறித்தவர்களை மட்டும் பழிவாங்காமல் சும்மாவிடமாட்டேன்.

"ஏற்படக்கூடிய மனத்தாங்கலை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருப்பதில் — மறைத்துக் கொள்வதில் தமிழ் நாட்டில் எவருக்கும், சளைத்தவனல்ல நான். அந்த மனத்தாங்கலை, சந்தர்ப்பம் வாய்க்கும்போது, சொல்லிக் காட்டிப் பழி வாங்குவதிலும் நான் குறைந்தவனல்ல என்பதை மட்டும், காங்கிரசார், மனதிலே பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

"'என்னுடைய பெயரைக் கூட மாற்றிக் கொள்ளுங்கள் என்று கூறுவார்கள் போலிருக்கிறது, இவர்கள்!' — என்று பேசினாராம், காமராசர்!

"இவர், இவரது பெயருக்கு லாயக்கற்றவர் என்பதை நாடு நன்கு உணர்ந்து வருகிறது. நமது பெரும் மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள், இவருக்குத் தந்த பெயர் 'பச்சைத் தமிழர்' என்பதாகும்; ஆனால், இவர் பச்சைத் தமிழராக இருக்கவில்லை; 'பச்சை' என்பதில், இடையில் உள்ள மெய்யெழுத்தை நீக்கிவிட்டால் 'பசை' என்றாகிறது; இவர் 'பசைத் தமிழ'ராக, எவரையேனும் கண்டால் அவரோடு ஒட்டிக்கொள்ள நினைக்கும் 'பசைத் தமிழ'ராக இருக்கிறாரே அல்லாது, 'பச்சைத் தமிழ'ராக இவர் இல்லை என்று நான் சொல்லத் தேவை இல்லை—நாடு சொல்லக் காத்திருக்கிறது!

"'டால்மியா வந்து பல இலட்ச ரூபாய் செலவில் தொழிற்சாலை கட்டி பலருக்கு வேலை தந்திருக்கிறான்; அந்த ஊரைப் போய் இவர்கள் மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்களே' — என்றாராம், காமராசர்!

"கிராமத்தில் உள்ள கலியாணமான பெண் ஒருவளை, ஊருக்குப் புதிதாக வந்த உல்லாச புருஷன் ஒருவன்—பட்டணத்துவாசி, கண் காட்டியும், கைகாட்டியும் சரிசெய்து, கடத்திக்கொண்டு போய்விட்டு, ஏழெட்டு ஆண்டுகள் கழித்து அந்தப் பெண் கழுத்தில் தங்க நகைகளாகப் போட்டு, கிராமத்திற்குத் திரும்பியும் அழைத்து வந்து, அவளிருந்த குடிசை வீட்டை நீக்கிவிட்டு மாடிவீடாக ஆக்கி அங்கு அவளுடன் வாழ்வதாக வைத்துக்கொள்வோம்; அவளைப் பார்த்துவிட்டு ஊரார், 'ஆள் இங்கிருக்கும்போது எவ்வளவு ஏழையாக இருந்தாள்? இப்போது எப்படி மாறிவிட்டாள்? குடிசை வீடு மாடி வீடாக மாறிவிட்டதே; நம் கிராமத்திற்கு அல்லவா, வைர ஓலையும், வைர நெக்லசும் அணிந்த பெண் வந்திருக்கிறாள்? நம் கிராமத்தில் அல்லவா, மாடிவீடு கட்டப்பட்டிருக்கிறது?'—என்று கூறிப் பெருமைப்படமாட்டார்கள்; மாறாக 'இனந்தெரியாதவனுடன் ஓடிப் போய்விட்டு, இப்போது ஒய்யாரியாகத் திரும்பி உல்லாசமாக வாழ்கிறாளே! மானங்கெட்டவள்! கற்பை விற்றுவிட்ட இவள் வாழ்கிற இந்த ஊரிலே நாம் வாழவேண்டியிருக்கிறதே!' என்று வேதனைப் படுவார்கள். அவள் வாழும் மாடிவீட்டை ஒரு அவமானச் சின்னமாகக் கருதுவார்கள்!

"அதுபோலத்தான், டால்மியாபுரம் பற்றி நாம் மன வேதனை கொள்வதும்!

"டால்மியா கட்டியிருக்கிற தொழிற்சாலை, பலருக்கு வேலை தருவதாகக்கூறும் காமராசர், அது ஒரு அவமானச் சின்னமாகக் கருதப்படுவது என்பதை மறந்துவிடக் கூடாது.

"பெயரை மாற்றவேண்டுமென்பது சிறு கிளர்ச்சி என்கிறார்; ஆனால், பெயர் மாற்றத்தின் பின்னாலே உள்ள தத்துவத்தை அவர் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"இங்கிலாந்து நாட்டு மக்கள் பெரியதொரு புரட்சி நடத்தினார்கள்; முதலாம் சார்லஸ் என்ற மன்னனை, அந்த நாட்டு மக்கள் தூக்கு மரத்தில் தொங்கவிட எண்ணினார்கள்; மன்னன், அரண்மனையைவிட்டு வெளியேற்றப்பட்டு, தூக்கிலே தொங்க விடப்படவிருக்கிறான் என்பதை அறிந்த ஒருவன், அரண்மனை வாயிலில், 'அரண்மனை வாடகைக்கு விடப்படும்' என்று கரித்துண்டு ஒன்றால் எழுதுகிறான்; இதைக் கண்ட மக்களில் சிலர், 'என்ன இது; அரண்மனை வாடகைக்கு விடப்படும் என்று எழுதுகிறாயே; அங்கே மன்னன் வாழ்கிறானே' என்று கேட்டனர்; எழுதியவனோ, மன்னன் இன்று அரண்மனையிலிருக்கிறான்; நாளையோ மறுதினமோ அங்கிருந்து இழுத்து வரப்பட்டு, தூக்கிலே தொங்க விடப்படுவான்; அப்போது, அரண்மனை காலியாகவிருக்கும்; ஆகவே, அதில் குடிபுக ஆள் தேவை என்று எழுதியிருக்கிறேன்,' என்று கூறியிருக்கிறான்; கரித்துண்டால் அந்த வாசகம் எழுதப்பட்ட ஆறாவது மாதத்திலேயோ, எட்டாவது மாதத்திலேயோ சார்லஸ் மன்னன் அரண்மனையிலிருந்து வெளியேற்றப்பட்டு, கிராம்வெல் என்ற சாதாரண ஒரு குடிமகன் அங்கே குடிபுகுந்தான் என்று வரலாறு கூறுகிறது.

"'அரண்மனை வாடகைக்கு விடப்படும்' என்று கரித் துண்டால் எழுதப்பட்ட வாசகம், இங்கிலாந்திலே நடைபெற்ற ஒரு பெரும் புரட்சியின் முன்னறிவிப்பாக இருந்ததுபோலத்தான், 'டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றுக' என்ற போராட்டம், எதிர்காலத்தில், வடநாட்டு ஆதிக்கக்காரர்களை வெளியேற்றுகிற புரட்சிக்கு முன்னறிவிப்பாக அமையக் கூடியதாகும்.

"இன்று, 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்ற வேண்டுமென்கிறோம்; நாளை, 'டால்மியாவிற்கு ஏன் அந்தத் தொழிற்சாலை?' என்போம்; மறுநாள், 'இத் தொழிற்சாலை அரசாங்கத்திற்கே சொந்தமாகட்டும்' என்று கோருவோம்; இப்படி படிப்படியாகப் போராட்டங்கள் வளரக்கூடும்.

"கலியாணத்திற்கு முன், மாப்பிள்ளை என்ன செய்கிறான்? 'மங்கள ஸ்நானம்' செய்விக்கிறார்கள்—குளிக்கிறான் மாப்பிள்ளை; குளிக்கும்போது, 'என்னடா, குளித்துவிட்டால் பெண் வந்துவிடுமா' என்றா கேட்பது? குளிப்பது எதற்காக? புத்தாடை புனைய! அது எதற்காக? மணப் பெண்ணைக் கைப்பிடிக்க! அது எதற்காக? மணமாலை அணிவிக்க! அது எதற்காக? கூடி வாழ—இன்புற—இல்வாழ்க்கை நடத்த! அதுபோல, பெயர் மாற்றம் நடத்துவது தாலிகட்டுவதற்கு முன் மணமகன் குளிப்பதைப் போன்றது; தொடர்ந்து—அடுத்தடுத்து, டால்மியா தொழிற்சாலையும், இந்த நாடும், இந்த நாட்டு மக்களுக்கு உரியனவாக்குவதற்காகப் போராட்டங்கள் வளரும்; எனவே, பெயர் மாற்றத்திற்குப் பின்னால் உள்ள தத்துவத்தை ஆட்சியாளர் உணர வேண்டும்.

"பஸ் ஒன்றில் ஏறவரும் உல்லாசப் புருடன் ஒருவனை, பிச்சைக்காரன் ஒருவன், 'ஐயா, காலணா தாருங்கள்' என்று கேட்கிறான்; அந்த உல்லாச புருடனோ, 'என்ன இது? நமது அந்தஸ்து என்ன, நிலை என்ன? இவன் போயும் போயும் காலணாக் கேட்கிறானே' என்று நினைத்து, 'எண்டா, காலணாவா என்னிடம் கேட்பது? அதிகமாகக் கேள்,' என்று கூறுகிறான்; பிச்சைக்காரனும் 'பெரிய மனிதரிடம்போய் காலணா கேட்டோமே' என்று வருந்தி, 'பத்து ரூபாய் தாருங்கள்' என்று கேட்கிறான்; உடனே உல்லாச புருடன் 'அதற்காகத்தானே மைலாப்பூர் போகிறேன்—கடன் வாங்கி வர,' என்று கூறிவிட்டு பஸ் ஏறிப் போய்விடுகிறான்.

"காலணா கேட்டபோது, 'இதென்ன, கொஞ்சமாகக் கேட்கிறாயே' என்று கூறிய பெரிய மனிதன், பத்து ரூபாய் கேட்டபோது 'இல்லை' என்று கைவிரிக்கிறான்.

"காமராசரிடம், பெயர் மாற்றம் போன்ற அவரது அதிகாரத்திற்குட்பட்ட—சுலபமான காரியத்தைச் செய்யுமாறு கேட்டால், 'இதென்ன, சின்ன விஷயம்' என்று கூறுகிறார்; 'சரி; சின்ன விஷயம் என்கிறாரே, பெரிய விஷயமாகக் கேட்போம்' என்று நினைத்து, 'ஐயா, திராவிட நாடு தாருங்கள்' என்று கேட்டால், 'அது தரமுடிந்தால். நான் என் டெல்லிக்கு மாதந்தோறும் காவடி எடுக்கிறேன்,' என்று கூறிடுவார்—பத்து ரூபாய் கேட்டதும், 'இல்லை' என்று கூறி, ஏறிப் போய் விடுகிற உல்லாச புருடன் போல!

இது தெரிந்திருப்பதினால்தான், யாரிடம் எது கேட்டால் சாயுமோ, யாரால எது முடியுமோ அவர்களிடம் அதைக்கேட்கிறோம்."

[அண்ணா அவர்களின் பேச்சு முடியவில்லை; தொடர்ந்து நாளை வெளிவரும்.]

மே விழாப் பொதுக்கூட்டம்

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில்

1—5—56 செவ்வாய் மாலை 6 மணிக்கு

தலைவர்:

இளம்பரிதி

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

மே தினச் செய்தி வழங்குவார்

குறிப்பு: பிற்பகல் 2 மணிக்கு அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் கிளம்பி, முக்கிய தெருக்கள் வழியாக வந்து கூட்டத்தை அடையும்.

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

★

நிகழ்ச்சிகள்:

சென்னை 16-வது வட்ட தி. மு. கழக முதலாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 29–4–56 மாலை 6 மணியளவில் யானைகவுனி நகரசபை விளையாட்டு மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் சி. பஞ்சாட்சரம் தலைமை தாங்கினார். முன்னுரையாக அவர் சிறிதுநேரம் பேசியபின் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் சிறிதுநேரம் பேசினார்.

அடுத்த தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், கே. ஏ. மதியழகன், சி. வி. இராசகோபால், தில்லை - வில்லாளன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், மாநில மாநாடு குறித்தும், நிகழ்கால வாழ்க்கை நிலை குறித்தும், கழகத்தின்மீது ஏவப்பட்டுள்ள தாக்குதல் குறித்தும் விளக்கம் தந்து பேசினர்.

அடுத்து, 16-வது வட்ட தி. மு. க. செயலாளர் ஆசைமுத்து வட்டக் கழகச் சார்பில், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக அண்ணா அவர்களிடம் ரூ. 100 அன்பளிப்பு வழங்கினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

கூட்டத்திற்கு, அச்சுறுத்திக் கொண்டிருந்த பெருமழையையும் பொருட்படுத்தாது பல்லாயிரக் கணக்கான மக்கள்—ஏராளமான தாய்மார்கள் உட்பட குழுமியிருந்து, கருத்துரை கேட்டு பயன் பெற்றனர்.

கூட்டத்தில் அண்ணா அவர்களுக்கும், இதர தோழர்களுக்கும், பல்வேறு மன்றங்கள், பல்வேறு கழகங்கள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப் பெற்றன.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

இந்தியாவின் வன வளத்தைப் பெருக்குவதற்காக இரண்டாவது திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 24 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

சென்னை 3-வது வட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு:

30–4–56 இரவு 7-30 மணிக்கு, 3-வது வட்ட கழகப் பணி மனையில், கழக நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யவும், மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதி தேர்ந்தெடுக்கவும் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.